Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.73/2020

Dated 02-02-2026
Deposition of witness for : PW 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | முருகையன் | தாலுக்கா | : | மன்னார்குடி |
| கிராமம் | : | ஆதிச்சபுறம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All other **Accused present. Accused 4 absent 355 BNSS Petition filed and allowed.**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன்.

2) கடந்த 8.6.2019 அன்று தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது இலுப்பக்கோரை மெயின்ரோட்டை சேர்ந்த முருகராஜ் மனைவி என் மகள் சத்யபாமா வயது 17 என்பவரை மணலூர் சாஸ்திரி நகரை சேர்ந்த பிரசாந்த் என்பவர் கடத்தி சென்றுவிட்டதாக கொடுத்த புகாரை பெற்று மனு எண். 185/2019 ரசீது கொடுத்து மனுவை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

3) ஒரு நாள் நடுகாவேரி ஆய்வாளர் என்னை தொலைபேசியில் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நடுகாவேரி ஆய்வாளர் என்னை விசாரித்த தேதி எனக்கு தெரியாது. கைபேசியில்தான் என்னை விசாரித்தார்.

2) மனு ரசீது கொடுத்துவிட்டு மறுநாள் பணிமாறுதலில் நான் சென்றுவிட்டேன்.

3) அய்யம்பேட்டை காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த முருகேசன் என்பவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் கொடுத்த மனு ரசீதின் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது அந்த ஆய்வாளர் முருகேசனுக்குதான் தெரியும் என்றால் சரிதான்.

4) காணவில்லை என்று கொடுத்த பெண் அப்போது மைனராக இருந்தார். அந்த சமயத்தில் அந்த சிறுமியின் புகைப்படும், வயது சான்றிதழும் கேட்டிருந்தேன்.

5) இலுப்பக்கோரை மெயின்ரோட்டை சேர்ந்த முருகராஜ் மனைவி என் மகள் சத்யபாமா வயது 17 என்பவரை மணலூர் சாஸ்திரி நகரை சேர்ந்த பிரசாந்த் என்பவர் கடத்தி சென்றுவிட்டதாக என்று சொன்னார் என்பது பொய் என்றும் நான் அரசுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் கைபேசி மூலம் விசாரித்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்